முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.8.2024) தலைமைச் செயலகத்தில், நிதித்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் தணிக்கைத் துறைகளில் கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர், இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர், உதவி ஆய்வாளர் மற்றும் உதவி தணிக்கை ஆய்வாளர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 780 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கிடும் அடையாளமாக 20 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நிதித் துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், நிதித்துறை செயலர் (செலவினம்) எஸ். நாகராஜன், தலைமை தணிக்கை இயக்குநர் ஜி.கே.அருண் சுந்தர் தயாளன், கூட்டுறவு தணிக்கைத்துறை இயக்குநர் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.8.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டின் கலாச்சார உறவுகளை மேம்படுத்தும் "வேர்களைத் தேடி திட்டத்தின் கீழ், தென் ஆப்ரிக்கா, உகாண்டா, குவாடலூப், மார்டினிக், பிஜி, இந்தோனேஷியா, மொரிஷியஸ், ஆஸ்திரேலியா, மாலத்தீவு, கனடா, மியான்மர், மலேசியா, இலங்கை. பிரான்சு மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த 100 அயலகத் தமிழ் இளைஞர்கள் 1.08.2024 அன்று முதல் 15.08.2024 வரையிலான தமிழக சுற்றுப் பயணத்திற்கு துணிமணிகள், பயண குறிப்புகள், புத்தகங்கள், அடையாள அட்டை போன்ற பயணத்திற்கான பொருட்களை வழங்கி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ் மஸ்தான், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பொது மற்றும் மறுவாழ்வுத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரிஷ் தக்கர், பொது மற்றும் மறுவாழ்வுத்துறை இணைச் செயலாளர் பா.விஷ்ணு சந்திரன், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் பா. கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பெண்கள் முன்னேற்றத்தில்

தமிழ்நாட்டை முதலிடத்திற்குக் கொண்டு வந்தது 'திராவிட மாடல்' அரசு!

தமிழ்நாடு மகளிர் உச்சிமாநாட்டில் - அமைச்சர் - முனைவர் டி.ஆர்.பி.ராஜா பெருமிதம்!

சென்னை, ஆக. 2–

"பெண்கள் முன்னே ற்றத்தில் தமிழ்நாட்டை முதலிடத்திற்கு கொண்டு வந்தது திராவிட மாடல் அரசு என்று தமிழ்நாடு மகளிர் உச்சி மாநாடு 2024ல் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றிய அமைச்சர், முனைவர் டி.ஆர்.பி.ராஜா பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

'தி இந்து' குழுமத்தின் 'தமிழ் நாடு மகளிர் உச்சி மாநாடு 2024' நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு (ம) வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா கலந்துகொண்டு 'சுடர் பிரகாசிக்கும் கனவுகள், ஊக்கமளிக்கும் கதைகள்' நூலினை வெளியிட்டுச் சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் அவர் பேசிய தாவது:

சில நாட்களுக்கு முன், தமிழ் நாடு குறித்து வடமாநில பெண்கள் பேசுவதை இன்ஸ்டாகிராம் ரீல்சில் பார்த்தேன்; அதில் பெரும்பாலான வடமாநில பெண்கள் இங்கே இயல்பாக, வழக்கமாக இருக்கும் விசயங்களை சொன்னார்கள் சென்னை பாதுகாப்பான நகரம், பெண்கள் இங்கே அதிக மரியாதை பெறுகிறார்கள், இங்கே யாரும் பெண்களை தொந்தரவு செய்யவதில்லை என அதில் ஒரு பெண்மணி சுவாரஸ்யமான ஒரு விசயத்தை சொன்னார்: அந்த பெண்மணி சென்னைக்கு வந்து வாழத் தொடங்கிய போது, எல்லோரும் அவரிடம் எங்கே வேலை செய்கிறீர் என்று கேட்டிருக்கி றார்கள். ஏனெனில் அனைவரும் அவர் வேலை செய்கிறார் என்று நினைத்து ள்ளார்கள் ஏனென்றால் தமிழ்நாட்டில் பெரும்பாலான பெண்கள் வேலை செய்கிறார்கள். இது அவர் வளர்ந்து, வாழ்ந்த அவரின் சொந்த மாநில அனுபவத்திலிருந்து மிகவும் மாறுபட்டது. ஏனெனில் இங்கே தமிழ்நாட்டு பெண்கள் வேலைக்குச் செல்வது இந்தியாவின் மற்ற பகுதிகளை விட நீண்ட காலத்திற்கு முன்பே சாதாரணமாகிவிட்டது.

20 வருடங்களுக்கு முன்பு என்னுடைய குழந்தைக்கு இவ்வளவு பாடப்புத்தகங்களை ஏன் கொடுக்கிறீர்கள்? அதனால் என்ன பயன், அதற்கு பதிலாக அவள் வேலை செய்யலாம் என பெற்றோர்கள் கேட்பார்கள். இன்று என்னுடைய பெண் குழந்தை ஓலா நிறுவனத்தில் வேலைக்குச் செல்ல என்ன படிக்க வேண்டும் என கேட்கிறார்கள். ஏனெனில் தொழில்மயமாக்கல் கொண்டுவரும் வாழ்க்கைத்

தரத்தை தாய்மார்கள் விரும்புகிறார்கள்.

இது வெறும் கதையோ அல்லது செய்தியோ அல்ல. தமிழ்நாட்டு பெண்கள் மற்றவர்களை விட எவ்வாறு முன்னேறியி ருக்கிறார்கள் என்பதைப் பல தரவுகள் காட்டுகின்றன.

இந்திய சராசரியை மிஞ்சிய தமிழ்நாடு!

இந்திய தொழிற்சாலைகளில் வேலை செய்யும் அனைத்து பெண்களில் 42% பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். தமிழ்நாட்டில் சேவை மற்றும் உற்பத்தி போன்ற முக்கிய துறைகளில் பெண்களின் பங்களிப்பு மிக அதிகம். சேவை மற்றும் உற்பத்தி துறைகளில் பெண்களின் தேசிய சராசரி பங்களிப்பு 43% ஆகும். இதில், குஜராத் 44% மற்றும் மகாராஷ்டிரா 35% ஆக இருக்கும்போது தமிழ்நாட்டில் இது 64% ஆக இருக்கிறது. இதன் பொருள் பெண்கள் தாழ்மையான வேலைகளில் மட்டுமே ஈடுபடவில்லை, அவர்கள் முக்கியமான பொருளாதாரத்தி லும் பங்கெடுக்கிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள அரசு வேலைகளில் பெண்களின் பங்களிப்பு 52% ஆக இருக்கிறது; ஆனால் இதன் தேசிய சராசரி 36% மட்டுமே.

தமிழ்நாட்டில் உயர்கல்வி சேர்க்கை விகிதம் 47% (GER RATIO) ஆக இருக்கும் நிலையில், பெண்களின் உயர்கல்வி சேர்க்கை விகிதம் 47.3% ஆக உள்ளது; ஆனால் தேசிய அளவில் உயர்கல்வி சேர்க்கை விகிதம் 28.4% மட்டுமே. இந்தியாவில் உள்ள அனைத்து பெண் பிளச்டி மாணவர்களில் 17.8% க்கும் அதிகமானவர்கள் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் என்பதோடு இது ஒரு மாநிலத்தின் அதிகபட்ச சராசரி ஆகும். உயர்நிலைக்கல்வியில் இடைநிற்றல் ஆகும் மாணவி களின் தேசிய சராசரி விகிதம் 12.3% ஆக இருக்கும்போது தமிழ்நாட்டின் சராசரி 2.5% ஆக மட்டுமே இருக்கிறது. இந்த மாற்றத்திற்கு என்ன காரணம்? தமிழ்நாடு மற்ற மாநிலங்களை விட இவ்வளவு முன்னேறியிருப்பது ஏன்?

பெரியார் - அண்ணா - கலைஞரின் சாதனைகள்!

இதற்கான முக்கிய காரணம் தமிழ்நாட்டின் அற்புதமான பெண்களே, இரண்டாவது முக்கிய காரணம் அரசியல் சார்ந்த தொடர்ச்சியான சமூக சீர்திருத்தங்கள் தான். இந்த சீர்திருத்தமானது தந்தை பெரியாரின் சமூக நீதி அரசியலுடன் தொடங்கி, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், செல்வி ஜெயலலிதா மற்றும் திராவிட நாயகரான நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் முயற்சிகளால் இப்போதும் தொடர்கிறது. தமிழ்நாடு எப்படி தொடர்ந்து முன்னேற முயற்சி செய்தது என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம் பெண்கள் காவல் துறையில் இருப்பதுதான்.

1929ல் செங்கல்பட்டில் நடந்த சுயமரியாதை இயக்க மாநாட்டில் தந்தை பெரியார் பெண்களை போலீஸ், ராணுவம் போன்ற துறைகளில் பணிக்குச் சேர்க்க வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றினார். 1973 ல் முத்தமிழறி ஞர் கலைஞர் ஆட்சிகாலத்தில்தான் காவல் துறையில் மகளிரை பணிநியமனம் செய்யும்முறை நடைமுறைக்கு வந்தது. ஒரு சப்–இன்ஸ்பெக்டர், ஒரு தலைமை காவலர், 20 காவலர்கள் என மொத்தம் 22 பெண்கள் முதன்முதலில் பணிய மர்த்தப்பட்டனர். 1992 ஆம் ஆண்டு செல்வி ஜெயலலிதா ஆட்சி காலத்தில், சென்னை ஆயிரம் விளக்கில் முழுவதும் பெண்களைக் கொண்ட அனைத்து மகளிர் காவல் நிலையம் தொடங்கப்பட்டது. தற்போது தமிழகம் முழுவதும் 202 மகளிர் காவல் நிலையங்கள் உள்ளன.

2004 ஆம் ஆண்டு நாட்டிலேயே முதல்முறையாக தமிழ்நாட்டில் பெண்களை மட்டுமே கொண்ட கமாண்டோ படை, அனைத்து மகளிர் போலீஸ் படை (பெண் போலீஸ் பட்டாலியன்) ஆகியவை உருவாக்கப்பட்டன. இன்று, காவல்துறையில் அனைத்து பதவிகளிலும் 30% பெண்களுக்கு ஒதுக்கப்பட்டிருப்பதால், தமிழ்நாடு காவல் துறையில் 20,000க்கும் அதிகமான பெண் காவலர்கள் உள்ளனர்.

பேரறிஞர் அண்ணாவின் 'சுயமரியாதை திருமண சட்டம், முத்தமிழறி ஞர் கலைஞர் கொண்டு வந்த பெண்களுக்கு குடும்ப சொத்தில் சம உரிமை, செல்வி ஜெயலலிதாவின் தொட்டில் குழந்தை திட்டம், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மகளிர் உரிமைத் தொகை போன்ற மகத்தான திட்டங்களை செயல்படுத்தியதற்காக அனைத்து தலைவர்களுக்கும் நாம் நன்றிக்கடன்பட்டிருக்கிறோம்.

முதலமைச்சரின் முத்தான திட்டங்கள்!

பெண்களை அதிகாரமயமாக்கும் பணிகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மகளிர் நலனை மேம்படுத்திடும் வகையில் "தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை 2024 ஐ வெளியிட்டார். அதில், பாலின உணர்திறன் கொண்ட கல்வி முறையை நிறுவுதல் மற்றும் பெண்குழந்தைகளின் இடை நிற்றல் விகிதத்தை குறைத்தல். வளரிளம் பெண்கள் மற்றும் மகளிரின் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல். வேலைவாய்ப்புகளில் மகளிரின் பங்களிப்பை அதிகரித்தல்.

அனைத்து அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாராத பணிகளில் உள்ள பெண் பணியாளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் அவர்களுக்கு உகந்த பணியிடங்களை உறுதி செய்தல். பெண்கள் நிர்வகிக்கும் சிறு தொழில்கள் மற்றும் அவர்கள் மேற்கொள்ளும் புதிய தொழில் முயற்சி களுக்கு ஆதரவளித்தல். பெண்கள் அதிக ஊதியம் பெறும் வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு டிஜிட்டல் கல்வியறிவை ஊக்குவித்து டிஜிட்டல் பாலின இடைவெளியைக் குறைத்தல். தொழில் துறையில், பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டை வழங்குவதன் மூலம் மகளிரிடையே நிலவும் திறன் இடைவெளியைக் குறைத்தல். நிறுவனக் கடன் வசதிகளை அணுகுதல் மற்றும் தேவைப்படும் மகளிருக்கு வங்கி கடனுதவி அதிகம் கிடைப்பதற்கு வழிவகை செய்தல். மகளிரை அரசியல் களத்தில் பங்கேற்க ஊக்கப்படுத்துதல் போன்றவை மகளிர் நலனை மேம்படுத்தும் முக்கிய குறிக்கோள்களாக உள்ளன.

மேலும், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம், புதுமைப் பெண் திட்டம், பணிபுரியும் மகளிருக்காக தோழி விடுதிகள், அரசுப் பேருந்துகளில் பெண்களுக்கு கட்டணமில்லா பயணம் (இதன்மூலம் பெண்கள் மாதந்தோறும் 900 1200 வரை சேமிக்கிறார்கள்), ஊதியத்துடன் கூடிய பேறுகால விடுப்பு 9 மாதங்களில் இருந்து 12 மாதங்களாக உயர்வு (நாட்டிலேயே மிக அதிகம்), தொழில் துறை: சிப்காட்களில் குழந்தைகள் பராமரிப்பு மையங்கள், புதிய தொழிற்சாலைகளில் பெண்கள், திருநங்கைகளுக்கு DEI மானியம் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் மகளிருக்கான சீர்மிகு முன்னோடி திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு (ம) வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா உரையாற்றினார்.

சுதந்திரப் போராட்ட வீரர்

தீரன் சின்னமலை சிலைக்கு முதல்வர் மரியாதை!

சென்னை, ஆக. 2 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் 3.8.2024 அன்று காலை 9.00 மணியளவில் சென்னை, கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்படும் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

தீரன் சின்னமலை அவர்கள் ஈரோடு மாவட்டம் காங்கேயம் அருகில் மேலப்பாளையம் என்ற சிற்றூரில் பிறந்தார். இவரது இயற்பெயர் தீர்த்தகிரி. தீரன் சின்னமலை அவர்கள் இளம் வயதிலேயே போர்க்கலைகளான வாள்பயிற்சி, வில் பயிற்சி, சிலம்பாட்டம், மல்யுத்தம், தடவரிசை போன்றவற்றைக் கற்றுத் தேர்ந்து சிறந்த இளம் வீரராகத் திகழ்ந்தார்.

பல்வேறு துணிச்சலான போர்க்கலைகளைக் கற்றுத் தேர்ந்து, போர் யுக்திகளைத் தனது படைகளுக்குக் கற்றுத்தந்தார். இந்திய விடுதலைப் போரில் பங்கேற்று ஆங்கிலேயர்களுக்குச் சவால் விட்டு அவர்களின் கிழக்கிந்தியக் கம்பெனியை அடியோடு ஒழிக்க நடவடிக்கை மேற்கொண்டார்.

ஆங்கிலேயர்களிடம் அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியாவை மீட்டெடுக்க மைசூர் மன்னன் திப்பு சுல்தான் உடன் இணைந்து செயல்பட்டார். கொங்கு மண்ணில், அன்றைய மைசூர் அரசு வசூலித்த வரியைத் தடுத்து "சென்னிமலைக்கும் சிவன்மலைக்கும் இடையே ஒரு சின்னமலை" என்று பெயர் பெற்றார்.

மைசூரில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடைபெற்ற மூன்று போர்களிலும் திப்பு சுல்தான் - தீரன் சின்னமலை கூட்டணி வெற்றியடைந்ததைக் கண்டு வெகுண்டெழுந்த ஆங்கிலேயர்கள் பல புதிய போர் யுக்திகளைக் கையாளத் திட்டம் தீட்டினர்.

திப்பு சுல்தான் மாவீரன் நெப்போலியனிடம் நான்காம் மைசூர்ப் போரில் தங்களுக்கு உதவி புரியக் கோரி தூது அனுப்பினார். என்னதான் நெப்போலியன் உதவி புரிந்தாலும், தங்களது படைகளோடு துணிச்சலுடனும் வீரத்துடனும் திப்பு சுல்தானும் சின்னமலையும் அயராது போரிட்டனர். மைசூர் மன்னர் திப்பு சுல்தான் நான்காம்மைசூர்ப்போரில் போர்க்களத்திலேயே வீரமரண மடைந்தார்.

அதன் தொடர்ச்சியாக நடைபெற்ற பல போர்களில் தோல்வியடைந்த ஆங்கிலேயர்கள் கோபமடைந்து தீரன் சின்ன மலையைச் சூழ்ச்சி செய்து அவரையும், அவரது சகோதரர்களையும் ஆங்கிலேயர்கள் கைது செய்து சங்ககிரிக் கோட்டையில் தூக்கி லிட்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில் சென்னை, கிண்டியில் முழு உருவச் சிலையினை அமைத்து 4.10.1998 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் திறந்து வைக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசின் சார்பில், சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, நடைபெறும் இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், சீர்மிகு பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

தி.மு.க. தலைமை இலக்கிய அணி சார்பில் - "கலைஞர் 100 கவிதைகள் - 100" நூல் வெளியீடு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட - கி.வீரமணி பெற்றுக்கொள்கிறார்!

கவிப்பேரரசு வைரமுத்து முன்னிலை! நா.சந்திரபாபு விழா ஏற்பாடு!

சென்னை, ஆக. 2 - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கழக இலக்கிய அணி சார்பில் 100 கவிஞர்கள் எழுதியுள்ள கவிதை தொகுப்பினை கவிப்பேரரசு வைரமுத்து தொகுத்து வழங்கியுள்ள "கலைஞர்- 100 - கவிதைகள் - 100" நூலினை 7.8.2024 அன்று காலை 10 மணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட, கவிப்பேரரசு வைரமுத்து முன்னிலையில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பெற்றுக்கொள்கிறார்.

தொடர்ந்து மாலை 5 மணிக்கு அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நூல் அறிமுக விழா நடைபெறுகிறது. இதில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமை வகிக்கிறார். அணி தலைவர் வி.பி.கலைராஜன் வரவேற்றுப் பேசுகிறார்.

நிகழ்ச்சியில் முன்னாள் எம்.பி. டி.கே.எஸ். இளங்கோவன், அன்பகம் கலை, பூச்சி எஸ். முருகன், துறைமுகம் காஜா, மாவட்டச் செயலாளர்கள் நே.சிற்றரசு, மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அமைச்சர் எ.வ.வேலு, திருச்சி சிவா எம்.பி., கவிப்பேரரசு வைரமுத்து ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர். நிகழ்ச்சி நெறிவாளர் தஞ்சை கூத்தரசன்.

கவிச்சுடர் கவிதைப் பித்தன், மு.தென்னவன், நந்தனம் நம்பிராஜன், ஈரோடு இறைவன், செந்தலை கவுதமன், டாக்டர் ந.எழிலன் எம்.எல்.ஏ., எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., மா.பா.அன்புதுரை, நந்தனம் கி.மதி, பேரர் முரசு கதிரவன், மாநில இலக்கிய அணி நிர்வாகிகள் நா.செந்தில், பேரா சேவு கபெருமாள், கே.எஸ்.எம். நாதன், சி.தசரதன், அ.திராவிட மணி, காரை வெங்கடாசலம், பெருநாழி போஸ், நேரு பாண்டியன், ஆடுதுரை உத்திராபதி, பரம்புரம் பழனி, ஸ்ரீதர், பகுதிச் செயலாளர்கள் நா.இராமலிங்கம், பரமசிவம், ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், எஸ். மதன்மோகன், வினோத் வேலாயுதம், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர்கள் மு.சீனிவாசன், விஜய் வெங்கடேசன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

விழா ஏற்பாட்டினை கழக இலக்கிய அணி பொருளாளர் நா.சந்திரபாபு செய்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி மின்துறை

த.தெ.நு.மை.ந.க.எண்.சி1 / 2761 / 2023 **குறுகிய மறு ஒப்பந்தப்புள்ளிகள்**

கீழ்கண்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் மேற்பார்வை பொறியாளர், மின்துறை பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் கோரப்படுகிறது.

Rate Contract for supply of 50 No's of Desktop Computers, 50 No's Laser Printers, 50 No's of UPS and 10 No's Laptops with 5 Years onsite warranty / support for GCC users for a period of 6 months - க்கான ஒப்பம்.

பணியின் மதிப்புத் தொகை ரூ.56,20,906/- | **ஒப்ப முன் வைப்புத் தொகை ரூ.56,209/-**

ஒப்ப படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். நிறைவு செய்யப்பட்ட ஒப்பப்புள்ளிகள் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் **12.08.2024 அன்று பிற்பகல் 3.00 மணி.**

ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **13.08.2024 அன்று பிற்பகல் 3.15 மணி**

செ.ம.தொ.இ / 2726 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **கண்காணிப்பு பொறியாளர் / மின்சாரம்**

தேனி தெற்குமாவட்டம் ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம் ஊரகப் பகுதியில் 'மக்களுடன் முதல்வர்' முகாமை ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன், மாவட்ட ஆட்சியர் சஜீவனா ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம், நகர அவைத் தலைவர் செட் பரமேஸ்வரன், பேரூர் செயலாளர் சரவணன், கவுன்சிலர்கள் சரவணன், பஞ்சு நல்லகாமன், ஆணையாளர் போஸ், வட்டாட்சியர் கண்ணன், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி வடக்கு மாவட்டம்

தூத்துக்குடி மாநகரம், திரேஸ்புரம் பகுதி, 25வது வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு!

தூத்துக்குடி வடக்கு மாவட்டம், திரேஸ்புரம் பகுதி, 25வது வட்டச் செயலாளர் எஸ். அந்தோணிசாமி (எ) அண்டோ அவர்கள் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற அவருக்குப் பதிலாக திரு. **ஜேம்ஸ் ரோலண்ட்.** (30, வடக்கு ராஜா தெரு, தூத்துக்குடி 1.) அவர்கள் 25வது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 31.07.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பொ. தனசேகரன்

ஆகஸ்ட் 2 (2015)

தனது இளமைக் காலம் முதல் கழகத்தில் ஈடுபாடு கொண்டு சென்னை, வேளச்சேரி பகுதியில் கழக வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியவர்.

1962ஆம் ஆண்டில் வேளச்சேரி கிளைக் கழகப் பொருளாளராகப் பொறுப்பு வகித்த இவர், தாமஸ்மலை ஒன்றியப் பிரதிநிதி, வேளச்சேரி வட்டச் செயலாளர், வேளச்சேரி பகுதிச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றினார்.

1996–ல் சென்னை மாநகராட்சி 153–வது வார்டில் கழகத்தின் சார்பில் மாமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களை நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.